## பத்தாம் வகுப்பு

### தமிழ் – இரண்டாம் தாள் (மாதிரி வடிவமைப்பு)

### (இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

காலம் – 2.30 மணி மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **நான்கு பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**உரிய விடையை தேர்ந்தெழுதுக.** **5 x 1 = 5**

1. வினைத்தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரைத் தேர்ந்தெழுதுக.
   அ) செய்தொழில் ஆ) மாறாஇளமை இ) பூரிகிழங்கு ஈ) தேரும் திருவிழாவும்
2. கீழ்வருவனவற்றுள் உம்மைத்தொகையைத் தேர்ந்தெழுதுக.
   அ) தெருக்கடை ஆ) வெற்றிலைபாக்கு இ) விளக்கெண்ணெய் ஈ) தாயும்சேயும்
3. ஒருபொருட் பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.
   அ) விருப்பும் வெறுப்புமின்றி வாழ்ந்தான் ஆ) இரவுபகல் பாராது உழைத்தான்.
   இ) உயர்ந்தோங்கிய மலையைக் கண்டேன். ஈ) கயிறு திரிக்கிறான்.
4. ‘வௌவால்’ – இச்சொல்லில் பயின்றுவரும் குறுக்கம் யாது ?
   அ) ஐகாரக்குறுக்கம் ஆ) ஔகாரக்குறுக்கம் இ) மகரக்குறுக்கம் ஈ) ஆய்தக்குறுக்கம்
5. இறந்தகால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக.
   அ) வருகிறான் ஆ) வருவான் இ) வருகின்றான் ஈ) வந்தான்

**பகுதி – 2**

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5 x 1 = 5**

6. மரவேர் என்பது ________________விகாரம் ஆகும்.
7. ‘வேய்புரை தோள்’ – இச்சொல்லில் அமைந்துள்ள உவமை உருபு ________________.
8. நண்பகல் என்பது ________________ திணைக்குரிய சிறுபொழுது.
9. ‘ஆடுவாயா’ என்னும் வினாவுக்குப் ‘பாடுவேன்’ எனக் கூறுவது ________________ விடை.
10. மொழியமிழ்து – இவ்வுருவகத்திற்கான உவமை ________________

**பகுதி – 3**

**சுருக்கமாக விடையளிக்க.** **10 x 1 = 10**

11. வல்லினம் மிகும் இடங்களுள் ஒன்றனுக்குச் சான்று தருக.
12. பெறு – இச்சொல்லை வினையெச்சமாக்குக.
13. இளமையில் கல் – இத்தொடரைச் செய்தித்தொடராக மாற்றுக.
14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைநீக்கி எழுதுக.

    படித்து முடித்தவருக்கு அவரவர் தகுதிக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பணிபுரியும் வாய்ப்புகள் உள்ளது.
15. கீழ்க்காணும் தொடரில் சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

    உரிமைக்குரல் கொடுத்த நல்லோர்களைதான் நாம் சீர்திருத்தச் செம்மல்கள் என சிந்தை மகிழப் பாராட்டுகிறோம்.
16. பொய்யா விளக்கு – இலக்கணக் குறிப்புத் தருக.
17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச்சொற்களை நீக்கி எழுதுக.

    வலதுபக்கச் சுவற்றில் எழுதாதே.
18. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருட்தமான நிறுத்தக்குறியிட்டு எழுதுக.

    மண் என்றால் நிலம் என்பது பொருள் தமிழர்கள் நிலத்தைக் குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை என ஐவகையாகப் பிரித்தார்கள்
19. கீழ்க்காணும் மரபுத்தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

    பாரதிதாசன் தமிழிலக்கிய வானில் கொடிகட்டிப் பறந்தார்.
20. நானிலம் – இத்தொகைச்சொல்லை விரித்தெழுதுக.

**பிரிவு – II**

**(மதிப்பெண்கள் – 10)**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** **5 x 2 = 10**

21. பெற்றேன் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
22. அடுக்குத்தொடரும் இரட்டைக்கிளவியும் எவ்வாறெல்லாம் வேறுபடுகின்றன ?
23. மருதத்திணைக்குரிய கருப்பொருள்கள் ஆறனை எழுதுக.
24. எயில் காத்தல் எவ்வகைத்திணை ? அதற்கு எதிரான திணையை விளக்குக.
25. ஆய்தக்குறுக்கத்திற்கு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.
26. விடை எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?
27. வெண்பா எத்தனை வகைப்படும் ? அவையாவை ?

**பிரிவு – III**

(மதிப்பெண்கள் – 50)

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 x 5 = 10**

28. கீழே உள்ள பாடலில் பயின்றுவரும் பாவகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணம் எழுதுக.

தாய்மொழி வளர்த்தல் தமிழர்தங் கடனே
வாய்மொழி புரட்தல் மற்றவர் கடனே
காய்மொழி தவிர்த்தல் கற்றவர் கடனே
ஆய்மொழி யுரைத்தல் அறிஞர்தங் கடனே.

29. வஞ்சப்புகழ்ச்சி அணி அல்லது உவமை அணியைச் சான்றுதந்து விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

## பகுதி – 2

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.**

**2 x 5 = 10**

31. பரிதிமாற்கலைஞரின் தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தும் அவர்தம் செயல்கள் ஐந்தனைக் குறிப்பிடுக.

32. பொங்கற் புதுநாளின் மாண்பினைப் பற்றி, அறிஞர் அண்ணா கூறுவனவற்றை எழுதுக.

33. ''என்னடியம்மா, இந்தக் குட்டியெல்லாம் இப்படிக் கத்துதே. கவனிக்கக் கூடாதா. பாவம், என்றாள் கிழவி. ''அந்த நாய் காலையிலே போனது, இன்னும் வரவில்லை அத்தை. பால் இல்லாமல் குட்டி எல்லாம் கத்துது'' என்றாள் மருமகள்.

## பகுதி – 3

34. **அ. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

**3 + 2 = 5**

'பஸ் ஏன் இவ்வளவு ரஷ்ஷாக இருக்கிறது? நிற்கக்கூட முடியவில்லை. உட்காருவதற்கு ஒரு சீட் கிடைத்தால் நன்றாக இருக்கும். லேட்டாகப் போனால், ஆபிஸ்ல மேனேஜர் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாது.'

**ஆ. கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றியெழுதுக.**

75, 39, 148, 260

35. **அ. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக.** 3 +2 = 5

Educational Institutions are the true seats of learning. The students, who are really anxious to learn, can develop healthy habits only in the schools. In a school we are taught how to move in society, how to behave with others and how to progress in life.

**ஆ. கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

1. Health is wealth.
2. Make hay while the sun shines.
3. Self-help is the best help.
4. Work is worship.

**பகுதி – 4**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க** **5**

**36. அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பைத் தருக.**

கீழ்வானம் சிவக்கத் தொடங்கியிருந்தது. பறவைகள் ஒலியெழுப்பியவாறே தட்தம் கூடுகளை விட்டுப் பறக்கத் தொடங்கின. அந்த விடியற்காலை நேரத்தில் திடீரென்று வானில் ஓர் ஒளி தோன்றியது. அப்போது..............................

(அல்லது)

**ஆ. கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.**

மழை (அல்லது) கடல்

**பகுதி – 5**

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்டக் கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய ஐந்து நயங்களை எடுத்தெழுதுக.** 1 x 5 = 5

சோற்றைஅள் ளுங்கால் துவள்வாழைத் தண்டிலுறும்
சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம் – ஊற்றுநெய்யை
வாழை இலையின் அடிஉண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள் – சூழவைத்துத்
தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும் – பண்ணியமும்
முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத் தக்கபடி
கேட்கும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே!

– பாரதிதாசன்

## பகுதி – 6

**38. கீழுள்ள வங்கிப் படிவத்தை நிரப்புக.** 5

**<u>வங்கிக்கணக்கில் பணம் செலுத்தும் படிவம்</u>**

................கிளை நாள்............
இடம்.......................
சேமிப்புக் கணக்கெண்..............
நிலையான கணக்கெண்....................
பெயர்.......................
ரூபாய்.......................

ரூ.

| காசோலை எண்/ நாள் | பெறப்பட்ட வங்கி/ கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:
தொகை

காசாளர் எழுத்தர்/மேற்பார்வையாளர்

....................கிளை
இடம் .......................
சேமிப்புக் கணக்கெண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

பெயர் ................................
ரூபாய்................................
காசோலை விவரம்:

| காசோலை எண் / நாள் | பெறப்பட் வங்கி / கிளை |
|---|---|
| | |

## பகுதி – 7

**39. அ. கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையெழுதுக.** **3 + 2 = 5**

மாறன், வளவனின் நெருங்கிய நண்பன். சில நாளாக உடல்நலமில்லாமல் இருந்த மாறன் நேற்று எதிர்பாராதவிதமாக மாடிப்படியிலிருந்து கீழே விழுந்ததில் முற்றிலுமாகத் தன் நினைவை இழந்துவிட்டான். மாறனின் நிலைகண்டு வளவன் மிகவும் வருத்தமடைந்தான். உணவு உண்பதற்குக்கூட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனுடைய மனவருத்தம் பெற்றோருக்குத் தெரிந்திருந்தது. அவர்கள் எவ்வளவுதான் ஆறுதல் மொழிகள் கூறினாலும் அவனால் நண்பனுக்கு ஏற்பட்ட துன்பத்தைத் தாங்கிக்கொள்ள இயலவில்லை.

1. வளவன், ஏன் மனவருத்தத்தோடு இருந்தான்?
2. நமக்குத் தாங்க இயலாத துன்பம் ஏற்படும்போது அதிலிருந்து மீள வழி யாது?
3. இச்சூழலில் பயன்படுத்தவேண்டிய வாழ்வியல் திறன்கள் யாவை?

**ஆ) கீழ்க்காணும் சூழலைப்படித்து விடையெழுதுக.**

விழிமாற்றுத்திறனாளி ஒருவர் சாலையைக் கடப்பதற்காக நெடுநேரமாகக் காத்துக்கொண்டு இருக்கிறார். அந்த வழியாகப் பலரும் கடந்து செல்கின்றனர். ஆனால், அவருக்கு உதவ ஒருவரும் முன்வரவில்லை.

1. இதுபோன்றதொரு சூழலில் நீ எவ்வாறு செயல்படுவாய்?
2. பிறருக்கு உதவுவதால் வெளிப்படும் பண்பு யாது?

## பிரிவு – IV

**(மதிப்பெண்கள் : 20)**

**<u>பகுதி – 1</u>**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** 10

**40.** (அ) நும் ஊருக்குக் குடிநீர் வசதி செய்துதருமாறு மாவட்ட ஆட்சியருக்கு விண்ணப்பம் வரைக.

(அல்லது)

(ஆ) தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப்பட்டியல் உருவாக்குக.

**<u>பகுதி – 2</u>**

**கீழுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றனுக்குக் குறிப்புகளைக் கொண்டு ஒருபக்க அளவில் கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக.** 10

41. (அ) **கணினி –** தோற்றம் – வளர்ச்சி – இணையம் – இணையதள வசதி – கணினி வழிக் கல்வி வியத்தகு செயல்கள் – பயன்படும் துறைகள் – உலகம் உள்ளங்கையில்.

(அல்லது)

(ஆ) **சுற்றுப்புறச்சூழல்** – மாசுக்கட்டுப்பாடு – இயற்கையை அழித்தல் – காற்றுமாசு – நச்சுப்புகை – நீர்மாசு – தொழிற்சாலைகளின் கழிவு – மாசடைந்தநீர் – ஒலிமாசு – ஒலிபெருக்கி – இரைச்சல் – நரம்புமண்டலப் பாதிப்பு – கட்டுப்படுத்தும் வழிகள்.

# தமிழ் இரண்டாம் தாள்

## மாதிரி வினாத்தாள் – 1

## (இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

காலம் – 2.30 மணி | மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **நான்கு பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**உரிய விடையை தேர்ந்தெழுதுக.** **5 x 1 = 5**

1. வளையல் – இச் சொல்லில் 'ஐ'காரம் எத்தனை மாத்திரையளவு குறைந்து ஒலிக்கிறது ?

(அ) அரை மாத்திரை (ஆ) ஒரு மாத்திரை

(இ) ஒன்றரை மாத்திரை (ஈ) இரண்டு மாத்திரை

2. பல்+தீது என்பது எவ்வாறு புணரும் ?

(அ) பஃறீது (ஆ) பஃடீது (இ) பல்றீது (ஈ) பற்றீது

3. ஐவர் போருக்குச் சென்றனர் – இதில் ஐவர் என்ற சொல் குறிப்பது.

(அ) ஆணை (ஆ) பெண்ணை (இ) பலரை

4. இனங்குறித்தல் அமைந்த சொல்

(அ) செய்தொழிதல் (ஆ) மாறாஇளமை

(இ) வெற்றிலைமென்றான் (ஈ) வருகின்றான்

5. 'வருக' இச்சொல்லின் பகுதி

(அ) வா (ஆ) வந்து (இ) வரு (ஈ) வர

## பகுதி – 2

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5 x 1 = 5**

6. 'செய்' என்றச் சொல்லின் வினையெச்சம் ________________ ஆகும்.

7. மலர்ப்பாதம் என்பதன் உருவகம் ________________ ஆகும்.

8. தாயொப்பப் பேசும் மகள் இதில் ________________ உவம உருபாகும்.

9. வைகறை இச்சிறுபொழுது ________________ திணைக்குரியது.

10. வெற்றி பெற்ற மன்னனைப் புகழ்ந்து பாடுவது ________________ திணையாகும்.

## பகுதி – 3

**சுருக்கமாக விடையளிக்க.** **10 x 1 = 10**

11. வியங்கோள் வினைமுற்றுக்கு எடுத்துக்காட்டு தருக.

12. கீரி என்பதற்கு இளமைப் பெயர் யாது ?

13. முதலைக்கண்ணீர் இம்மரபுத் தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

14. திருக்குறள் படி – இத்தொடரைச் செய்தித் தொடராக மாற்றுக.

15. கீழ்க்காணும் தொடரில் உள்ள சந்திப்பிழைகளை நீக்கி எழுதுக.

    மேடை பேச்சு மிகுந்த பயனை தரவல்லது

16. வருக வருக – இலக்கணக் குறிப்பு தருக.

17. கீழ்க்காணும் தொடரில் உள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.

    வலது பக்கச் சுவற்றில் எழுதாதே

18. கீழ்க்காணும் உரைப் பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டெழுதுக.

    தொலைக்காட்சி குளிரூட்டும் கருவி செல்பேசி கணினி முதலியவற்றைப் பழுதுபார்க்கும் படிப்புகளும் உள்ளன

19. கீழ்க்காணும் தொடரில் உள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

    வயது வந்தோர்க்கும் பெண்களுக்கும் வாக்குரிமை கொடுக்கப்பட வேண்டுமென அம்பேத்கர் கூறியதை நாளேடுகள் புகழ்ந்தது.

20. முத்தமிழ் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

## பிரிவு – II

(மதிப்பெண்கள் – 10)

**கீழ்க்காணும் வினாக்களுள் ஏவையேனும் ஐந்தனுக்கு விடையெழுதுக.** **5 x 2 = 10**

21. வாழ்வாள் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

22. மகர குறுக்கத்திற்கு எடுத்துக்காட்டு தந்து விளக்குக.

23. குறிஞ்சித்திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

24. நிரைகவர்தல் எவ்வகைத்திணை ? அதற்கு எதிரான திணையை விளக்குக.

25. இரட்டைக்கிளவிக்கும் அடுக்குத் தொடருக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை ?

26. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

27. ஆசிரியப்பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

## பிரிவு – III

(மதிப்பெண்கள் – 50)

### பகுதி – 1

**கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டக்கு விடையெழுதுக.** **2 x 5 = 10**

28. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணத்தையும் எழுதுக.

‘பார்மொழிகள் அத்தனைக்கும் பாங்கான நற்றாயாம்
சீர்கொண்ட செந்தமிழே சிந்தனையில் ஏற்றிடுவாய்
பார்முழுதுஞ் சாற்றிடுவாய்ப் பாய்ந்து.

29. வஞ்சப் புகழ்ச்சி (அல்லது) உவமையணியைச் சான்று தந்து விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு, வாய்பாடு தருக.

‘தக்கார் இனத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.’

### பகுதி – 2

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையெழுதுக.**
**2 x 5 = 10**

31. எம்.ஜி. இராமச்சந்திரன் குழந்தைகளுக்கு ஆற்றிய தொண்டினைப் பற்றி விளக்குக.

32. ‘குறட்டை ஒலி’ என்னும் கதையில் இடம் பெறும் மருமகளின் கருணை உள்ளம் பற்றி எழுதுக.

33. அகழாய்வு குறித்த செய்திகளை எழுதுக.

**பகுதி – 3**

**34. அ. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.** **3 + 2 = 5**

ஈவ்னிங் ஸ்கூல் விட்டு பஸ்ஸில் வீட்டிற்குச் சென்றபின் யூனிபார்ம் மாற்றிக் கொண்டு சூடாக டிபன் சாப்பிட்டுக் கொண்டே டிவி பார்த்தான்.

**ஆ. கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றியெழுதுக**

101, 128, 131, 150

**35. அ. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக.** **3+2 = 5**

Trees are very usefull to us. They give us timber and firewood. The timber is used to make chairs, tables and other furniture. We get oil from the oil seeds of some trees. The leaves and fruits of some trees are used to prepare medicines.

**ஆ. கீழ்க்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

(i) Diamonds cut diamonds.

(ii) Old is gold.

(iii) No pain no gain.

(iv) Manners make the man.

**பகுதி – 4**

**36. அ. கீழேக் கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பும் எழுதுக.** **5**

வயதான தந்தைக்கு நான்கு மகன்கள் இருந்தார்கள். அவர்கள் எப்போதும் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொண்டே இருந்தார்கள். அதனால் மனம் வருந்திய தந்தை அவர்களை எப்படியாவது திருத்த வேண்டும் என எண்ணினார். ஒரு நாள்.......

(அல்லது)

**ஆ. கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை ஒன்று எழுதுக.**

கார்மேகம் (அல்லது) பூஞ்சோலை

**பகுதி – 5**

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்டக் கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய ஏதேனும் ஐந்து நயங்களை எடுத்தெழுதுக.** **5**

நீலமுடி தரித்தபல மலைசேர் நாடு
நீரமுத மெனப் பாய்ந்து நிரம்பு நாடு

கோலமுறு பயன்மரங்கள் செறிந்து வாழுங்
குளிர்காவுஞ் சோலைகளுங் குலவு நாடு
ஞாலமெலாம் பசியின்றிக் காத்தல் வல்ல
நன்செய்யும் புன்செய்யும் நலமிக் கோங்கப்
பாலடையு நறுநெய்யுந் தேனு முண்டு
பண்ணவர் போல் மக்களெலாம் பயிலுநாடு.

– பாரதியார்.

## பகுதி – 6

**38. கீழுள்ள படிவத்தை நிரப்புக.** 5


தெற்கு ரயில்வே
முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

## பகுதி – 7

**39. அ. கீழ்க்காணும் சூழலைப் படித்து, அது குறித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.** 3 + 2 = 5

எழிலனும் தமிழரசனும் நெருங்கிய நண்பர்கள். ஆனால் எழிலனுக்குத் தமிழரசன் மட்டுமே நண்பன். தமிழரசனுக்கோ வகுப்பில் மட்டுமன்றிப் பள்ளியிலும் அனைவரும் நண்பர்களே; பார்க்கும் யாவரிடத்திலும் அன்பாகவும் நட்பாகவும் பழகுவான். பெரியவர்களிடம் மரியாதையுடன் நடந்து கொள்வான். தன்னால் முடிந்த உதவிகளும் செய்வான். எழிலனும் நல்ல

மாணவன்தான். ஆனால் தானாகச் சென்று பழக மாட்டான். வினாவுக்கு மட்டுமே விடை சொல்வான். தமிழரசனிடம் எல்லாரும் நெருங்கிப் பழகுவது எழிலனுக்கு வேதனை தந்தது.

1. இவர்களில் யாரைப்போல் இருப்பது நலம் ?
2. 'தன்னிடம்' அனைவரும் நெருங்கிப் பழகுவதற்கு எழிலன் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் நினைக்கிறீர்கள் ?
3. உங்களுக்கு நண்பர்கள் உண்டா ? எத்தனை பேர் ?

**ஆ. கீழ்க்காணும் சூழலைப்படித்து விடையெழுதுக.**

மதியழகன் பத்தாம் வகுப்பில் படித்து வருகின்றான் மேற்கொண்டு திரைப்படக் கல்லூரியில் சேர்ந்து படிக்க வேண்டும் என்று அவன் விரும்புகின்றான். வீட்டில் அவன் பெற்றோரோடு ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கும்போது, தன் எண்ணத்தை வெளியிடுகிறான். அதைக் கேட்டதும் தந்தை அவன் மீது சினம் கொள்கிறார். ஏனெனில் அவன் மிகச் சிறந்த பொறியாளனாக வர வேண்டும் என்பது அவருடைய விருப்பம். மதியழகன் தந்தையிடம் எப்படிச் சொல்லி புரியவைப்பது என்று தடுமாறுகிறான்.

1. தந்தையின் சினம் சரியானதா ?
2. தந்தையை மதியழகன் எவ்வாறு சம்மதிக்க வைப்பான் ?

**பிரிவு – IV**

(மதிப்பெண்கள் – 20)

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **10**

40. (அ) குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையர்க்கு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

(ஆ) அலுவலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க தன் விவரப் பட்டியல் தருக.

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை எழுதுக.** **10**

41. **(அ) மழைநீர் சேகரிப்பு :** நீரின்றி இயங்காது உலகம் – நீர்ப் பற்றாக்குறை ஏற்படக் காரணம் – மழைநீரைச் சேமித்தல் – மழை நீரின் பயன்கள் – சேமிக்கும் வழிமுறைகள் – மரம் வளர்ப்போம் – மழை பெறுவோம்.

(அல்லது)

**(ஆ) கணினி** – தோற்றம் – வளர்ச்சி – இணையம் – இணையதள வசதி – கணினி வழிக் கல்வி – கணினியின் வியத்தகு சாதனைகள் – பயன்படும் துறைகள் – உலகம் உள்ளங்கையில்.

# தமிழ் இரண்டாம் தாள்

## மாதிரி வினாத்தாள் – 2

## (இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

காலம் – 2.30 மணி மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **நான்கு பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**உரிய விடையை தேர்ந்தெழுதுக.** **5 x 1 = 5**

1. பண்புத் தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரை எழுதுக.
   அ. குலக்கொடி ஆ. கருங்குதிரை இ. தடக்கை ஈ. மாமலர்
2. நிகழ்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக.
   அ. வந்தாள் ஆ. வருவாள் இ. வருகிறாள் ஈ. வாராள்
3. கீழ் வருவனவற்றுள் பொதுமொழியைத் தேர்ந்தெழுதுக.
   அ. பலகை ஆ. படம் இ. செய்தான் ஈ. வந்தான்
4. கீழ்வருவனவற்றுள் உம்மைத் தொகையெத் தேர்ந்தெழுதுக.
   அ. இரவு பகல் ஆ. வருக வருக இ. மலர்க்கை ஈ. முத்தமிழ்
5. ஒரு பொருட் பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.
   அ. நடுமையம் ஆ. செய்வாயா இ. மலரும் மணமும் ஈ. தைத்திங்கள்

**பகுதி – 2**

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5 x 1 = 5**

6. யாமம் – இச்சிறுபொழுது ______________திணைக்குரியது.
7. செய்வாயா ? என்ற வினாவிற்குக் கைவலிக்கும் என்று கூறுவது __________ விடை.
8. அப்படி, இப்படி, எப்படி என்னும் சொற்களின் பின் வல்லினம் ______________.

9. கனிவாய் என்பது ________________ என மாறினால் உருவகமாகும்.

10. மலரன்ன சேவடி இச்சொல்லில் ________________ என்பது உவம உருபு.

**பகுதி – 3**

**சுருக்கமாக விடையளிக்க.** **10 x 1 = 10**

11. வரும் வண்டி என்பதில் பயின்று வரும் குறுக்கம் யாது ?

12. வடகிழக்கு – இச்சொல்லில் அமைந்துள்ள புணர்ச்சி எது ?

13. படி – இச்சொல்லை வினையெச்சமாக்குக.

14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழையை நீக்கி எழுதுக.

ஓர் இளம் பெண் நூலொன்றை விரும்பிப் படித்துக் கொண்டிருந்தார்கள்.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளை நீக்கி எழுதுக.

வள்ளலார் அருளிய வழிகளை கடை பிடித்து
ஒழுகினால் மனிதநேயம் மலரும் .

16. நாற்றிசை – இச்சொல்லை விரித்தெழுதுக.

17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

அந்த விஞ்ஞானியின் கண்டுபிடிப்பு மிகவும் புதுமையானது.

18. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.

அப்பெண்ணின் வரலாற்றை யானறிவேன் என்று கோவலன் கண்ணகி வரலாற்றைச் சுருக்கமாகக் கூறினார்

19. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.

இன்னக்கி ஒருகிலோ அவரக்கா வாங்கி வந்தேன்.

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

1. ஆகாயத்தாமரை

**பிரிவு – II ( மதிப்பெண்கள் : 10 )**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு விடையெழுதுக.** 5 x 2 = 10

21. அறிந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

22. ஆய்தக் குறுக்கத்தைச் சான்றுடன் விளக்குக.

23. முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

24. ஒன்றொழி பொதுச் சொல்லை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

25. உற்றது உரைத்தல், உறுவது கூறல் விடைகளைச் சான்றுடன் விளக்குக.

26. தும்பை வாகைத் திணைகளை விளக்குக.

27. நேரிசை ஆசிரியப்பாவின் இலக்கணம் தருக.

**பிரிவு – III ( மதிப்பெண்கள் : 50 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டக்கு விடையெழுதுக. 2 x 5 = 10**

28. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, அதன் இலக்கணத்தையும் எழுதுக.

அறிந்தானை ஏத்தி அறிவாங்கறிந்து
சிறந்தார்க்கு செவ்வனுரைப்ப ____________ சிறந்தார்
சிறந்தமை ஆராய்ந்து கொண்டு

29. இரட்டுறமொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

**பகுதி – 2**

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க. 2 x 5 = 10**

31. அன்றாட வாழ்வில் பயன்படும் சட்டங்கள் குறித்துக் கட்டுரை எழுதுக.

32. தொன்மைக்கால நிகழ்வுகளைக் கண்டறிவதற்குத் தடயங்கள் எவ்வாறு உதவுகின்றன ?

33. தமிழகத்திலுள்ள மிகப்பழமையான நூலகங்கள் பற்றி தொகுத்து எழுதுக.

**பகுதி – 3**

34. **அ. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க. 3 + 2 = 5**

"டாடி வர்ற சண்டே எனக்கு பர்த்டே, பட் நீங்க இன்னும் எனக்கு பர்த்டே டிரஸ் எடுக்கவில்லையே!'' எப்போ ஷாப்பிங் போவீங்க என்றாள்

**ஆ. கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றுக.**

100, 5, 7, 9

**35. அ. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக. 3+2 = 5**

This is the age of Computers. Computers are becoming more and more a part of everyday life. Today in the running of business, Firm, industrials concerns and government departments, lot of information processing is required.

**ஆ. கீழ்க்காணும் ஆங்கில பழமொழிக்கு இணையான தமிழ் பழமொழியை எழுதுக.**

(i) All the glitter is not gold.

(ii) Look before you leap.

(iii) East or west, home is the best

(iv) A friend in need is a friend indeed.

## பகுதி – 4

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.**

**36. அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பும் எழுதுக. 5**

கண்ணன் பத்தாம் வகுப்பில் படிக்கிறான். காலையில் ஐந்து மணிக்கே எழுந்து விடுவான். அவனுடைய அம்மாவுக்கு, அவனால் இயன்ற உதவிகளைச் செய்வான். பின்னர் எட்டு மணியளவில் நடந்தே பள்ளிக்குச் செல்வான். ஒரு நாள் ஓட்டமும் நடையுமாய்ப் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தான் அப்போது சாலையில்........

( அல்லது )

**ஆ. கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.**

கடல் (அல்லது) கார்மேகம்

## பகுதி – 5

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்ட கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய ஐந்து நயங்களை எடுத்தெழுதுக. 5**

அப்பாநான் வேண்டுல் கேட்டருள்புரிதல் வேண்டும்
ஆருயிர்கட்கெல்லாம் நான் அன்புசெயல் வேண்டும்
எப்பாரும் எப்பதமும் எங்கணும் நான் சென்றே
எந்தைநின தருட்புகழை இயம்பியிடல் வேண்டும்

செப்பாத மேனிலைமேல் சுத்த சிவ மார்க்கம்

திகழ்ந்தோங்க அருட்சோதி செலுத்தியிடல் வேண்டும்

தப்பேது நான் செயினும் நீ பொறுத்தல வேண்டும்

தலைவநினைப் பிரியாத நிலைமையும் வேண்டுவனே.

– இராமலிங்க அடிகள்.

## பகுதி – 6

**38. கீழுள்ள படிவத்தை நிரப்புக. வங்கியில் பணம் செலுத்தும் படிவம் நிரப்புதல் 5**

..................கிளை நாள்............
இடம்.........................
சேமிப்புக் கணக்கெண்...............
நிலையான கணக்கெண்.....................
பெயர்..........................
ரூபாய்.......................... ரூ.

| காசோலை எண்/ நாள் | பெறப்பட்ட வங்கி/ கிளை | தொகை ரூ. |
|---|---|---|
| | | |

காசோலை விவரம்:
தொகை

காசாளர் எழுத்தர்/மேற்பார்வையாளர்

......................கிளை
இடம் .........................
சேமிப்புக் கணக்கெண்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|

பெயர் ..............................

ரூபாய்..............................
காசோலை விவரம்:

| காசோலை எண் / நாள் | பெறப்பட் வங்கி / கிளை |
|---|---|
| | |

## பகுதி – 7

**39. அ. கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து, அதுகுறித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக. 3 + 2 = 5**

பதினொன்றாம் வகுப்பில் சேர்ந்து சில நாள் ஆகிறது. தேவி அன்று பள்ளிக்குப் போகாமல் அழுது கொண்டிருந்தாள். அவள் கண்கள் இரண்டும் சிவந்து விட்டன, ஆனால் அவள் பெற்றோர், அவளின் அழுகையைப் பொருட்படுத்தவில்லை. நான் சொன்னது தான். நீ படித்தது போதும், இன்னும் மூன்று மாதத்தில் உனக்குத் திருமணம் செய்ய வேண்டியது தான் என்று கூறியவாறே அவளுடைய தந்தை

வெளியே சென்றுவிட்டார். ‘அப்பா உனக்கு நல்லதுதான் செய்வார். அப்பாவின் பேச்சைக் கேள்’ என்று அம்மாவும் கூறவே, என்ன செய்வதென்று தெரியாமல் வருத்தத்துடன் இருந்தாள் தேவி.

1. இந்நிலையில் தேவி எத்தகைய முடிவெடுப்பாள் ?
2. உங்களுக்கு இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் நீங்கள் எப்டித் தீர்வு காண்பீர்கள் ?
3. இச்சூழலில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்வியல் திறன் என்ன ?

**ஆ. கீழ்க்காணும் சூழலைப்படித்து விடையெழுதுக.**

இரண்டு நாள் பெய்த பெருமழையின் விளைவாக இன்று பள்ளிக்கு விடுமுறை அறிவிக்கிறார்கள் பள்ளிக்கு வந்த மாணவர்கள் தத்தம் வீட்டிற்குத் திரும்புகிறார்கள். ஆனால், கதிரவனின் வகுப்புத் தோழர்கள், அவனைத் திரைப்படம் பார்க்க வருமாறு அழைக்கிறார்கள். பெற்றோருக்குத் தெரிந்தால் தன்னைக் கண்டிப்பார்கள் என்று கதிரவனுக்குத் தெரியும். திரைப்படத்திற்குச் செல்லாவிடில் நண்பர்கள் தன்னை ஒதுக்கி விடுவார்கள் என்றும் அவன் நினைக்கிறான்.

1. இந்நிலையில் கதிரவன், தன் மனவெழுச்சிகளை எவ்வாறு கட்டுப்பத்துவான் ?
2. கதிரவன் நிலையில் நீங்கள் இருந்தால் என்ன செய்வீர்கள் ?

**பிரிவு – IV**

**(மதிப்பெண்கள் : 20)**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **10**

**40.** (அ) நீவிர் கண்டு களித்த இடம் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) தட்டச்சர் பணிக்கு விண்ணப்பிக்க, தன் விவரப் பட்டியல் தயாரித்தெழுதுக.

## பகுதி – 2

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை எழுதுக. பொருத்தமான தலைப்பு ஒன்றும் தருக. 10**

41. சுற்றுச்சூழல் – மாசுக் கட்டுப்பாடு, இயற்கையை அழித்தல் – காற்று மாசு – நச்சுப்புகை – நீர்மாசு – தொழிற்சாலையின் கழிவு – மாசடைந்த நீர் – ஒலி மாசு – ஒலி பெருக்கி இரைச்சல் – நரம்பு மண்டலம் பாதிப்பு – கட்டுப்படுத்தும் வழிகள்.

(அல்லது)

பெண்கல்வி – பெண்ணுரிமை – சமுதாயத்தில் பெண்கள் நிலை – பெண்களுக்கு சொத்துரிமை பெண் விடுதலை – மணக்கொடை – பெண் கல்வியால் ஏற்பட்ட சமுதாய மாற்றங்கள்.

# தமிழ் இரண்டாம் தாள்

## மாதிரி வினாத்தாள் – 3

## (இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

காலம் – 2.30 மணி மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **நான்கு பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**உரிய விடையை தேர்ந்தெழுதுக.** **5 x 1 = 5**

1. உவமைத் தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரை எழுதுக.

   அ. செந்தமிழ் ஆ. பாலும்தேனும் இ. தேன்தமிழ்

2. தெரிநிலைப் பெயரெச்சத்தைத் தேர்ந்தெழுதுக.

   அ. வந்தபையன் ஆ. நல்லபையன் இ. தீய பையன்

3. ‘மாடு’ என்னும் சொல் கீழ்வருவனவற்றுள் எதைக் குறிக்கிறது ?

   அ. உயர்திணைப் பொதுப்பெயர் ஆ. அஃறிணைப் பொதுப்பெயர்

   இ. விரவுப் பொதுப்பெயர்

4. ஒரு பொருட் பன்மொழியைத் தேர்ந்தெழுதுக.

   அ. உயர்ந்தோங்கிய மரம் ஆ. ஐவர் கோலமிட்டனர்

   இ. சிறந்த தமிழ்நாடு

5. ஓரெழுத்தொரு ஒரு மொழியைத் தேர்ந்தெழுதுக.

   அ. பாடல் ஆ. மாலை இ. பூ

## பகுதி – 2

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5 x 1 = 5**

6. வந்தான் இச்சொல்லின் ______________ என வரும்போது வினையெச்சமாகும்.

7. கேட்டஇச்சொல்லின் பகுதி ______________.

8. கடலும் கடல் சார்ந்த இடமும் ______________.

9. மகிழ்ச்சி காரணமாக வந்த அடுக்குத் தொடருக்கு ______________ எடுத்துக் காட்டாகும்.

10. நன்னூல் கிடைக்குமா ? என்று கடைக்காரரிடம் கேட்பது ______________ வினா ஆகும்.

## பகுதி – 3

**சுருக்கமாக விடையளிக்க.** **10 x 1 = 10**

11. மொழிக்கு முதலில் மட்டும் வரும் குறுக்கம் எது ?

12. பொதுமொழிக்கு எடுத்துக்காட்டு தருக.

13. தினமும் திருக்குறள் படிக்கிறாயா ? இது எவ்வகை வாக்கியம் ?

14. எய்தாப்பழி இலக்கணக்குறிப்பு தருக.

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

    வகுப்பறை நூலகத்தில் மாணவர்களின் வயதிற்கும் மனநிலைக்கும் ஏற்ப அறிவு சார் நூல்கள் இடம் பெற்றுள்ளது.

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழை நீக்கி எழுதுக.

    ஏழைகளுக்கு பொருள்பெறாமல் வாதாடி நீதிபெற்று தந்தார்.

17. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.

    ஆத்தங்கரை அருகாமையில் நாகரிகம் தோன்றியது.

18. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிடுக.

    மருத்துவம் பொறியியல் சட்டம் வேளாண்மை முதலியவை தொழிற்கல்வித் துறைகளாம்.

19. திருமணம் என்பது ஆயிரங்காலத்துப் பயிர் – இதிலுள்ள மரபுத் தொடரை எடுத்து எழுதுக.

20. ஐம்புலன் – இத்தொகைச் சொல்லை விரித்தெழுதுக.

**பிரிவு – II**

**( மதிப்பெண்கள் : 10 )**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஐந்தனுக்கு விடையெழுதுக.** 5 x 2 = 10

21. எய்துவர் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

22. இனங்குறித்தல் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு தருக.

23. மருதத்திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கனை எழுதுக.

24. எயில்காத்தல் எவ்வகைத்திணை ? அதற்கு எதிரான திணையை விளக்கி எழுதுக.

25. ஔகாரக் குறுக்கத்தைச் சான்றுடன் விளக்குக.

26. அறிவினா, அறியாவினா இவற்றை விளக்குக.

27. பா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

**பிரிவு – III**

**( மதிப்பெண்கள் : 50 )**

**பகுதி – 1**

**இ) கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடை எழுதுக.** 2 x 5 = 10

28. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டு, பா இலக்கணம் எழுதுக.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.

29. சொற் பொருள் பின்வருநிலையணி என்றால் என்ன ? சான்று தந்து விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

## பகுதி – 2

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப்பக்க அளவில் விடையளிக்க.**

2 x 5 = 10

31. மெல்ல மெல்ல மற – என்னும் சிறுகதையின் மையக் கருத்து மாறாமல் சுருக்கி எழுதுக.

32. தொல்லியல் துறை பற்றி எழுதுக.

33. குறட்டை ஒலி கதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்கி எழுதுக.

## பகுதி – 3

34. **அ. கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

**3 + 2 = 5**

பள்ளியிலிருந்து வீட்டிற்குள் நுழைந்த பாரி தன் ஸ்கூல் பேக்கை தூக்கிப் போட்டுவிட்டு மம்மி வாட்டர் என்று குரல் கொடுத்தான். அவன் தாய் கைகால் கிளீன் பண்ணிட்டு பேஸ் வாஷ் பண்ணிட்டுவா என்றான்.

**ஆ. கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றி எழுதுக.**

17, 40, 32, 50

35. **அ. கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக.** 3 + 2 = 5

The Television is one of the wonders of modern India. Many useful programs on education, health, agriculture and family planning are specially prepared for rural viewers. The Television is also used for commercial advertisements.

**ஆ. கீழ்காணும் ஆங்கிலப் பழமொழிகளில் இரண்டனுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

(i) Prevention is better than cure.

(ii) Slow and steady wins the race.

(iii) Time is gold

(iv) Knowledge is power

## பகுதி – 4

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.**

**36. அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பும் எழுதுக. 5**

ஓர் ஊரில் மக்கள் சோம்பலாக இருப்பதைப் பார்த்த மன்னன் அவர்களை மாற்ற நினைத்தான். மக்கள் நாள்தோறும் செல்லும் வழியில் பெரிய பாறாங்கல்லைப் போட்டு வைத்தான். அதற்கு அடியில் பெரும் புதையலை ஒளித்து வைத்தான். புதையலைக் கண்டுப்பிடிப்பவருக்கு அது சொந்தம் என அறிவித்தான். ஒரு நாள்...

( அல்லது )

**ஆ. கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.**

மழை (அல்லது) ஆறு

## பகுதி – 5

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்டக் கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய ஐந்து நயங்களை எடுத்தெழுதுக.** 1 x 5 = 5

பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாத புகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும்
மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை இல்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டார்
அதை வணக்கம் செய்தல் வேண்டும்.

– பாரதியார்.

## பகுதி – 6

**38. கீழ்க்காணும் வங்கியில் பணம் எடுக்கும் படிவத்தை நிரப்புக.** 1 x 5 = 5

| பதித்தவர் பேரேடு நாள்........................... | சேமிப்பு வங்கி கணக்கு எண்.................. இந்த ஆணைப்படிவத்துடன் கணக்குப் புத்தகம் இணைக்கப்பட வேண்டும்.<br>சேமிப்புக் கணக்கு<br>.............................. 20<br>.......................................................வங்கி ......................................................................................எனக்கு அல்லது இதனைக் கொணர்பவருக்கு<br>ரூபாய் ........................................................................................................................................ வழங்குக.<br>ரூ.<br>இப்பணம் எடுக்கும் சீட்டு மூலமாக கணக்கு வைத்திருப்பவரைத் தவிர மற்றவருக்கு ஆயிரம் ரூபாய் வரம்புவரை பணம் கொடுக்கப்படும்.<br>கணக்கு வைத்திருப்பவர் கையொப்பம் |
|---|

## பகுதி – 7

**39. அ. கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து, அது குறித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையெழுதுக.** 3 + 2 = 5

மாறன் பத்தாம் வகுப்புப் படிக்கிறான். சில நாளாக அவனுடைய செயல்களில் மாற்றம் ஏற்பட்டிருப்பதைப் பெற்றோர் உணர்ந்தனர். பள்ளி நேரம் முடிந்ததும் அவன் வீட்டிற்குத் தாமதமாக வருகின்றான். காரணம் கேட்டால் உண்மையைச் சொல்ல மறுக்கின்றான். வீட்டில் அடிக்கடிப் பணம் கேட்டுத் தொந்தரவு செய்கின்றான். நல்ல நண்பர்களுடன் அவன் பழகாததே இதற்குக் காரணம் என்று பெற்றோர் நினைக்கின்றனர்.

1. பெற்றோர் மாறனைப் பற்றி நினைப்பது சரியா ?

2. நாம் எப்படிப்பட்டவர்களோடு நட்புக் கொள்ள வேண்டும்.

3. நீ உன் பெற்றோரிடம் எவ்வாறு நடந்து கொள்வாய் ?

**(ஆ) கீழ்க்காணும் சூழலைப்படித்து விடையெழுதுக.**

பெற்றோர் எதிர்பாராத வகையில் வெளியூர் சென்றுவிடப் பூங்குழலி மட்டும் வீட்டில் தனியாகப் படித்துக் கொண்டிருக்கிறாள்.

பூங்குழலியின் தந்தையைத் தேடி ஒருவர் வீட்டிற்கு வருகிறார். தந்தை வெளியூர்

சென்றிருக்கிறார் என்று அவள் கூறினாலும். அவர் அதைக் கேட்காமல் அவளிடம் பேசிக் கொண்டே இருக்கிறார்.

1. அந்தச் சூழ்நிலையைப் பூங்குழலி எவ்வாறு எதிர்கொள்வாள் ?

2. நீங்கள் பூங்குழலியாக இருந்தால் என்ன செய்வீர்கள் ?

**பிரிவு – IV**

**( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** 10

40. (அ) பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் எழுதுக.

(அல்லது)

(ஆ) நூலக உதவியாளர் பணிக்கு விண்ணப்பிக்க தன் விவரப் பட்டியல் தயாரித்தெழுதுக.

**பகுதி – 2**

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை எழுதுக பொருத்தமான தலைப்பு ஒன்றும் தருக.** 10

41. **(அ) தமிழ்மொழியின் பழமை** – செம்மொழித் தகுதிப் பாடுகள் – இலக்கிய வளம் – இலக்கணச் சிறப்பு – தமிழ் மொழியின் தனித்தன்மை.

(அல்லது)

43. **(ஆ) பாரதியார்** – பிறப்பும் இளமையும் – விடுதலை வேட்கை – தேசியக் கவிஞர் பாரதியார் – முன்னறி புலவர் பாரதியார் – சமுதாயத் தொண்டு பாரதியாரின் பாடல்கள்.

# தமிழ் இரண்டாம் தாள்

## மாதிரி வினாத்தாள் – 4

### (இலக்கணம், துணைப்பாடம், கட்டுரை, கடிதம், மொழிப்பயிற்சி)

காலம் – 2.30 மணி மதிப்பெண் – 100

**அறிவுரை :** *அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின். அறை கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.*

*இவ்வினாத்தாள்* **நான்கு பிரிவுகளை** *கொண்டது.*

**குறிப்பு :** *விடைகள் தெளிவாகவும் குறித்த அளவிலும் அமைதல் வேண்டும்.*

**பிரிவு – I ( மதிப்பெண்கள் : 20 )**

**பகுதி – 1**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.**

**உரிய விடையை தேர்ந்தெழுதுக.** **5 x 1 = 5**

1. வினைத்தொகை பயின்று வந்துள்ள சொற்றொடரை எழுதுக.

   (அ) சூழ்கழல் (ஆ) கெடுக (இ) தளர்ந்த

2. எதிர்கால இடைநிலை அமைந்துள்ள வினைமுற்றைத் தேர்ந்தெழுதுக.

   (ஆ) வருவான் (ஆ) கண்டாள் (இ) படிக்கின்றாள்

3. கீழ்வருவனவற்றுள் தனிமொழியைத் தேர்ந்து எடுத்து எழுதுக.

   (அ) படம் பார்த்தான் (ஆ) வைகை (இ) கண்

4. கீழ்வருவனவற்றுள் உவமைத் தொகையைத் தேர்ந்தெழுதுக.

   (அ) மதிமுகம் (ஆ) செந்தாமரை (இ) சலசல

5. செறுநர் செருக்கு – இதில் பயின்று வந்துள்ள வேற்றுமைத் தொகை

   (அ) மூன்றாம் (ஆ) நான்காம் (இ) ஐந்தாம் (ஈ) ஆறாம்

## பகுதி – 2

**கோடிட்ட இடங்களை நிறைவு செய்க.** **5 x 1 = 5**

6. மாலை என்பது ________________ திணைக்குரிய சிறுபொழுது.

7. நடித்தார் – இவ்வினைமுற்றின் பகுதி________________

8. 'மாமலை' – இது ________________ தொடருக்கான சான்றாகும்

9. ஒருவற்கு அச்சம் தோன்றலின் விளைவாய் வந்த அடுக்குத் தொடர்________________.

10. இதனைச் செய்வாயா என்ற வினாவிற்கு நீயே செய் எனக்கூறல் __________ விடை.

## பகுதி – 3

**சுருக்கமாக விடையளிக்க.** **10 x 1 = 10**

11. செல் என்ற சொல்லின் வினையெச்சத்தைத் தருக.

12. ஒரு பொருட் பன்மொழிக்குச் சாறு ஒன்றனைத் தருக.

13. தலைவி – இச்சொல்லில் பயின்று வரும் குறுக்கம் யாது ?

14. கீழ்க்காணும் தொடரிலுள்ள ஒருமை பன்மைப் பிழைகளை நீக்கி எழுதுக.

    பெண்கள் பெற வேண்டியது பெண்கல்வி
    பெண்ணுரிமை, சொத்துரிமை

15. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழையை நீக்கி எழுதுக.

    ஆளும் அறிவும் வளர்வதற்கு முன்பாக வாழ்க்கை பயணமா ?

16. கீழ்க்காணும் தொடரிலுள்ள வழூஉச் சொற்களை நீக்கி எழுதுக.

    அவன் வீண் சிலவு செய்கிறான்.

17. கீழ்க்காணும் தொடரில் அமைந்துள்ள பிறமொழிச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொற்களை எழுதுக.

    இறைவனை நோக்கி யாத்திரை செல்லல் பக்தருக்கான மார்க்கம்.

19. கீழ்க்காணும் உரைப்பகுதிக்குப் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு எழுதுக.

    ஓட்டுநர் நடத்துநர் முதலான பணிகளுக்கும் உடற்கூறுத் தகுதியுடையவர்கள் மட்டுமே சேர இயலும்

20. கீழ்க்காணும் மரபுத் தொடர் குறிக்கும் பொருளை எழுதுக.

    கயிறு திரித்தல்

## பிரிவு – II

**(மதிப்பெண்கள் – 10)**

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு விடையளிக்க.** **5 x 2 = 10**

21. நிறைந்த – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

22. மையீற்றுப் பண்பு பெயர்கள் நான்கை எழுதுக.

23. முல்லை நிலத்திற்குரிய கருப்பொருள்கள் நான்கைத் தருக.

24. வாகைத்திணை என்பது யாது ?

25. குறள் வெண்பாவின் இலக்கணத்தைக் கூறி எடுத்துக்காட்டொன்று தருக.

26. வினா எத்தனை வகைப்படும் ? அவை யாவை ?

27. அடுக்குத் தொடர் என்றால் என்ன ? எடுத்துக்காட்டு ஒன்றைத் தருக.

## பிரிவு – III

(மதிப்பெண்கள் – 50)

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் இரண்டனுக்கு விடையளிக்க.** **2 x 5 = 10**

28. கீழுள்ள பாடலில் பயின்று வரும் பா வகையைக் குறிப்பிட்டுக, அதன் இலக்கணத்தையும் எழுதுக.

    பாரி பாரி என்று பல ஏத்தி
    ஒருவர் புகழ்வர் செந்நாப்புலவர்
    பாரி ஒருவனுமல்லன்
    மாரியும் உண்டீண் டுலகு புரப்பதுவே

29. பின்வருநிலையணி அல்லது எடுத்துக்காட்டு உவமையணியைச் சான்று தந்து விளக்குக.

30. கீழ்க்காணும் குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பொருளென்னும் பொய்யா விளக்கம் இருளறுக்கும்

எண்ணிய தேயத்துச் சென்று.

**பகுதி – 2**

**எவையேனும் இரண்டனுக்கு ஒவ்வொன்றுக்கும் அரைப் பக்க அளவில் விடையளிக்க.**

**2 x 5 = 10**

31. பரிதிமாற் கலைஞரின் தமிழ்த் தொண்டினை விளக்குக.

32. நூலகத்தினால் விளையும் நன்மைகளைக் குறிப்பிடுக.

33. தொன்மைக்கால நிகழ்வுகளைக் கண்டறிவதற்குத் தடயங்கள் எவ்வாறு உதவுகின்றன.

**பகுதி – 3**

**34. அ) கீழ்க்காணும் பத்தியில் அமைந்துள்ள ஆங்கிலச் சொற்களைத் தமிழாக்கம் செய்க.**

**3 + 2 = 5**

சுரேஷ் வாட் ஹேப்பண்ட்? ஏன் லேட்டா வர்றே? வழியிலேயே ஒரே டிராபிக் ஜாம்டா, அதனாலதான் லேட் சரி சரி பஸ் எத்தனை மணிக்கு வரும்?

**ஆ. கீழுள்ள அரபு எண்களைத் தமிழ் எண்களாக மாற்றியெழுதுக.**

51, 178, 24, 63

**35. அ) கீழ்க்காணும் ஆங்கில உரைப்பத்தியைத் தமிழாக்கம் செய்து எழுதுக. 3+2 = 5**

Food is essential for all living beings. Without food man cannot live long, Every man has to eat a certain quantity of food. So every man has to eat enough food to live.

**ஆ. கீழ்க்காணும் ஆங்கில பழமொழிகளுக்கு இணையான தமிழ்ப் பழமொழிகளை எழுதுக.**

(i) Work is worship

(ii) Time is gold.

(iii) Look before you leap

(iv) Self help is the best help

## பகுதி – 4

**36. அ. கீழே கொடுக்கப்பட்டுள்ள கதையை நிறைவு செய்து பொருத்தமான தலைப்பும் எழுதுக. 1 x 5 = 5**

முத்துசாமி என்பவர் மாற்றுத் திறனாளி. ஒருமுறை, நோயுற்ற தன் மகனுக்கு மருந்து வாங்குவதற்காக ஊன்று கோலைத் தட்டிக்கொண்டு தெருவில் நடந்து சென்று கொண்டிருந்தார். எதிரில் வந்து கொண்டிருந்த ஒருவர், அவரை இடித்து விட்டுச் சென்றார். அப்போது .....

(அல்லது)

**ஆ. கீழ்க்காணும் தலைப்பில் எட்டு வரிகளில் கவிதை ஒன்று எழுதுக.**

தமிழ் (அல்லது) பெண்கல்வி

## பகுதி – 5

**37. கீழ்க்காணும் பாடலின் திரண்டக் கருத்தை எழுதி, அப்பாடலில் அமைந்துள்ள ஏற்புடைய நயங்களையும் எடுத்தெழுதுக. 1 x 5 = 5**

மனிதரெலாம் அன்பு நெறி காண்ப தற்கும்
மனோபாவம் வானைப்போல் விரிவ டைந்து
தனிமனித தத்துவமாம் இருளைப் போக்கிச்
சகமக்கள் ஒன்றென்ப துணர்வ தற்கும்
இனிதினிதாய் எழுந்தஉயர் எண்ண மெல்லாம்
இலகுவது புலவர்தரு சுவடிச் சாலை
புனிதமுற்று மக்கள் புது வாழ்வு வேண்டில்
புத்தகசா லைவேண்டும் நாட்டில் யாண்டும்.

– பாரதிதாசன்.

### பகுதி – 6

**38.** **கீழுள்ள படிவத்தை நிரப்புக.**

**இரயில் முன்பதிவுப் படிவம்.** **1 x 5 = 5**


தெற்கு ரயில்வே

முன்பதிவு/ரத்து செய்யும் விண்ணப்ப படிவம்

நீங்கள் மருத்துவராயிருந்தால், தயவு செய்து பெட்டியில் (✓) செய்யவும் (நீங்கள் அவசரத்திற்கு உதவ விரும்பினால்)

மூத்த குடிமக்கள் சலுகை தேவைப்பட்டால் " தேவை/இல்லை " என்று அதற்குரிய பெட்டியில் எழுதவும். இச்சலுகை பெற விரும்பினால், வயது அத்தாட்சி சான்றிதழ் ஒன்றை பயணத்தின்போது எடுத்துச் செல்ல வேண்டும். (தவறினால் இரயில்வே விதிகளின்படி உரிய அபராதம் விதிக்கப்படும்)

உங்கள் பயணம் உயர்வகுப்புக்கு மேம்படுத்தப்படலாமா ? தேவை/இல்லை என்று எழுதவும் (உங்கள் விருப்பத்தை குறிப்பிடத் தவறினால் முழுக் கட்டண பயணிகளுக்கு இச்சலுகை தன்னிச்சையாக வழங்கப்படும்)

வண்டி எண்/பெயர்.................................................பயண தேதி..................................

வகுப்பு.............................படுக்கை/உட்காரும் எண்ணிக்கை...........................................

புறப்படும் இடம்.............................................சேரும் இடம்..........................................

ஏறும் இடம்..........................................

| வ. எண் | பெயர் (15 எழுத்துக்களுக்கு மிகாமல்) | பால் ஆ/பெண் | வயது | பயணச்சலுகை உரிமை எண் | விருப்பம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | | | கீழ் படுக்கை/ நடு படுக்கை/ மேல் படுக்கை |
| 2. | | | | | |
| 3. | | | | | சைவம்/ அசைவம் (இராஜதானி/ சதாப்தி விரைவு வண்டி) |
| 4. | | | | | |
| 5. | | | | | |
| 6. | | | | | |

ஐந்து வயதிற்கு உட்பட்ட குழந்தைகள் விபரம் (பயணச்சீட்டு வழங்கப்பட மாட்டாது)

| வ. எண். | பெயர் | பால் | வயது |
|---|---|---|---|
| | | | |
| | | | |

தொடர் பயணம்/திரும்பும் பயண விவரங்கள்

வண்டி எண்/பெயர்.................................................பயண தேதி..................................

வகுப்பு...................புறப்படும் இடம்.................................சேரும் இடம்..................................

விண்ணப்பதாரர் பெயர்..............................................................................................

விலாசம்...................................................................................................................

.................................................................................................................................

தொலைபேசி எண்.......................................... ..........................................

கையொப்பம்

அலுவலக உபயோகத்திற்கு மட்டும்

விண்ணப்ப படிவ எண்.............................................பயணச்சீட்டு எண்.......................................

இருக்கை எண்.................................................வசூலிக்கப்பட்ட தொகை ரூ................................

ரயில்வே அலுவலர் கையொப்பம்..........................................

குறிப்பு :- (1) ஒரு படிவத்தில் அதிகபட்சம் 6 பயணிகள் பெயர்கள் மட்டும் எழுதவும்.
(2) ஒருவர் ஒரு விண்ணப்பபடிவம் மட்டும் கொடுக்க வேண்டும்.
(3) கவுண்டரை விட்டு போகும்போது பயணச்சீட்டு மற்றும் மீதி தொகையை சரிபார்க்கவும்.
(4) முறையாக நிரப்பபடாத விண்ணப்பபடிவம் ஏற்க இயலாது.
(5) விரும்பும் இருக்கை இருக்கும் இடவசதியைப் பொறுத்து அமையும்.
(6) ஒரே பயணச்சீட்டில் பதிவு செய்த பயணிகள் அனைவருக்கும் வகுப்புமேம்பாட்டின்போது இருக்கைகள் அருகருகே கிடைக்கலாம் கிடைக்காமலும் போகலாம்.

### பகுதி – 7

**39.** **(அ) கீழ்க்காணும் வாழ்வியல் சூழலைப் படித்து விடையெழுதுக.** **3 + 2 = 5**

பூங்குழலி எல்லாரிடமும் அன்பாகப் பழகுவாள். அவள் வீட்டிற்கு யார் வந்தாலும் அவர்களிடம் தன்மையாகப் பேசுவாள். அதனால் அவளை எல்லாருக்கும் பிடிக்கும். அவள் எப்போதும் புன்முறுவலோடு வளைய வருவாள். வீட்டிற்கு வருபவர்களை,

‘வாங்க, வாங்க உட்காருங்க, அம்மா வந்திடுவாங்க என்று வரவேற்பாள். அவளைப் ‘புன்னகைப் பூங்குழலி’ என்றுதான் எல்லாரும் அழைப்பார்கள். அவர்கள் அழைப்பது சரிதானே, நீங்களே சொல்லுங்கள்.

1. பூங்குழலியின் பண்பை நீ ஏற்றுக் கொள்கின்றாயா ?

2. உங்கள் வீட்டிற்கு யாராவது வந்தால், நீ எவ்வாறு வரவேற்பாய் ?

3. பூங்குழலியைப் போல நீயும் எல்லாரிடமும் நன்கு பழகுகின்றாயா ?

**(ஆ) கீழ்க்காணும் சூழலைப்படித்து விடையெழுதுக.**

அன்பரசி பள்ளிக்குச்செல்லும் வழியில் அந்தக் காட்சியை நாள் தோறும் காணத் தவறுவதில்லை. கண்ணொளி இழந்த மூதாட்டி ஒருவர், சாலை ஓரத்தில் உட்கார்ந்திருப்பார். அவருடைய கைகள் இரண்டும் கூடை முடைதலில் விரைவாகச் சுழன்று கொண்டிருக்கும். எப்படி இவரால் இவ்வளவு விரைவாகச்செயல்பட முடிகிறது என்று அன்பரசி வியப்படைவாள். ஒரு நாள் தன் இரு கண்களையும் கட்டிக் கொண்ட அன்பரசி, வீட்டிற்குள் அங்கும் இங்கும் நடந்து பார்த்தாள். அங்கு இருந்த மேசையின்மீது மோதிக் கொண்டாள். அப்போதுதான், அவர்கள் எத்தகைய துன்பத்தை அடைகிறார்கள் என்று எண்ணிப் பார்த்து மனம் வருந்தினாள்.

1. மாற்றுத் திறனாளிகளிடம் நீங்கள் எப்படி நடந்து கொள்வீர்கள் ?

2. இப் பகுதியின் மூலம் நீ அறிந்து கொள்ளும் கருத்து என்ன ?

**பிரிவு – IV**

(மதிப்பெண்கள் – 20)

**பகுதி – 1**

**கீழ்க்காணும் வினாக்களுள் ஒன்றனுக்கு விடையளிக்க.** **10**

**40.** அ. குடிநீர் வசதி வேண்டி ஊராட்சி ஒன்றிய ஆணையருக்குக் கூட்டு விண்ணப்பம் எழுதுக.

(அல்லது)

ஆ. கணினி அலுவலகத்தில் கணினி இயக்குபவர் பணிக்கு விண்ணப்பிக்க தன் விவரப் பட்டியல் தயாரித்தெழுதுக.

## பகுதி – 2

**கீழ்க்காணும் குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் விரிவான கட்டுரை எழுதுக. தலைப்பு ஒன்று தருக. 10**

41. **அ. அருங்காட்சியகம்** – தொல்லியல் துறை – அகழாய்வு குறித்த செய்திகள் – தொல் பொருள்கள் – முது மக்கள் தாழிகள் – சென்னை அருங்காட்சியகம்.

(அல்லது)

**ஆ. நூலகம்** – நூலகத்தின் தோற்றம் – நூலகத்தின் பல்வேறு பெயர்கள் –நூலகத்தின் பயன்கள் – பள்ளி நூலகம் – தமிழக நூலகங்கள்.